CAREERINDIA

**SL. No. : X**

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 50 ]
Total No. of Questions : 50 ]

# CCE RF
# CCE RR

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8
Total No. of Printed Pages : 8

## ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T
## Code No. : 10-T

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು
## Subject : First Language — TAMIL

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ + ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Fresh + Regular Repeater )**

ದಿನಾಂಕ : 30. 03. 2017 ] [ Date : 30. 03. 2017

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–12-30 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-30 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 50-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலது கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

www.careerindia.com

CAREERINDIA



## பகுதி அ

I. ஒரு தொடரில் விடை தருக : 11 × 1 = 11

1. 'தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை' என்று பாரதிதாசன் எதனைக் குறிக்கின்றார் ?

2. பிரமன் இராவணனுக்கு கொடுத்த சாபம் யாது ?

3. இயல்புக் கவிதையில் மனிதன் தொலைத்தவையாக ஆண்டாள் பிரியதர்சினி யாது கூறுகிறார் ?

4. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பழைய போக்கிலே எது இல்லை என்கிறார் ?

5. மேலைநாடுகளில் உரையாடல் கலை எவ்வாறு மதிக்கப்படுகின்றது ?

6. திரு. வி.க. சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?

7. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர் ?

8. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?

9. இலங்காவித் தீவில் வௌவால் குகைகள் எவ்வாறு காட்சியளிக்கின்றன ?

10. பம்பன் தன் இளமைக் காலத்தை எங்கு கழித்தான் ?

11. ஆரிய மன்னர்கள் தமிழ் நாட்டரசர்களை எவ்வாறு பழித்தனர் ?

II. பின்வரும் வினாக்களுக்கு மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 9 × 2 = 18

12. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்பு யாது ?

13. கட்டித் தயிரைப் பிசைந்து சங்கத் தலைவி எவ்வாறு சமைத்தாள் ?

14. பெண்கள் பாரினில் எதை நடத்த வந்தனர் ?

15. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு யாது ?

16. C.F.C. ஓசோனில் ஏற்படுத்தும் பாதிப்பு யாது ?

www.careerindia.com

CAREERINDIA



17. குழந்தைகளை ஏற்றிக்கொண்டு பஸ்கள் எவ்வாறு நகரத்திற்குச் செல்லும் ?

18. விடுகதை என்பதை விளக்குக.

19. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

20. பாணன் தான் கொண்டு வந்த பரிசுப் பொருட்கள் யாதென்பதற்குக் கூறிய சொற்கள் யாவை ?

III. பின்வரும் வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 9 × 3 = 27

21. உழவுத் தொழி ன் உயர்வையும் உழவர்களின் உயர்வையும் வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகின்றார் ?

22. சிவனடியார் வடிவில் வந்த இறைவனுக்கு இளையான்குடி மாறர் மனைவி சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்களை எழுதுக.

23. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாக திரும்பிவர நேரிடும் ?

24. மாணிக்கவாசகர் சிவனைப் போற்றி வணங்கும் சிறப்பினை விளக்குக.

25. அடி என்றால் என்ன ? வகையை விளக்குக.

*அல்லது*

வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

26. "அன்னைக்கு ஆபீசுக்கு லீவு விடுவாங்களா சார்"

27. 'பாவம் கொஞ்சம் நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்"

28. "பட்டினிகிட பலாவையே உண்பதென்று"

29. "எம் தமிழ்ப்பாவையைச் சுமந்து செல்லுங்கள்"

IV. பின்வரும் வினாவுக்கு எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக: 3 × 4 = 12

30. இலங்கையில் சீதை இருந்த நிலை குறித்து அனுமன் கூறியவற்றை எழுதுக.

*அல்லது*

பாரதியார் கூறும் பெண் விடுதலை குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.

www.careerindia.com

CAREERINDIA



31. இரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் உரையாடல் சிறப்பிற்குச் சான்றாக விளங்கும் நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்காட்டுக.

*அல்லது*

கிராமத்தின் மாலை நேரக்காட்சிகளை கி. ராஜநாராயணன் எவ்வாறு விளக்குகிறார் ?

32. நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கிறோம் ?

*அல்லது*

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விவரி.

V. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

33. 'இனிமைத் தமிழ்மொழி....' என வரும் பாடல்.

*அல்லது*

"இம்பர்வான் எல்லை" என வரும் பாடல்.

VI. 34. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : 4 × 1 = 4

மக்கள் தங்கள் மகிழ்ச்சியை விழாக்களாகக் கொண்டாடுகின்றனர். மக்களுக்குள் ஒற்றுமையை வளர்ப்பதற்கும் உறவை வலுப்படுத்துவதற்கும் உணர்ந்த உண்மைகளைப் போற்றுவதற்கும் விழாக்கள் பயன்படுகின்றன. உழவர்கள் வாழ்வில் பாலும் சோறும் பொங்குவதோடு அவர்தம் உள்ளத்தில் மகிழ்ச்சியும் பொங்குவதைக் குறிப்பதே பொங்கல் திருவிழா ஆகும். 'பொங்கல்' என்று சொல்லும்போதே அச்சொல் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கச் செய்கிறது. மக்கள் தம் வாழ்வின் தேவைகளைப் பெற்று 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என பொங்கிய உள்ளத்தோடு மற்றவர்க்கும் வாரி வழங்கும் விழாவே பொங்கல் விழா ஆகும்.

www.careerindia.com

CAREERINDIA



வினாக்கள்:

i) மக்கள் தங்கள் மகிழ்ச்சியை எவ்வாறு கொண்டாடுகின்றனர் ?

ii) விழாக்கள் எதற்குப் பயன்படுகின்றன ?

iii) பொங்கல் திருவிழா எதைக் குறிக்கிறது ?

iv) மக்கள் எவ்வாறு பொங்கிய உள்ளத்தோடு வாரி வழங்குகின்றார்கள் ?

## பகுதி ஆ

VII. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமை பெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். 10 × 1 = 10

35. செப்பலோசை உடையது .................................... .

(A) ஆசிரியப்பா (B) க ப்பா

(C) வெண்பா (D) வஞ்சிப்பா.

36. மூன்று சீர்களை உடையது .................................... .

(A) அளவடி (B) சிந்தடி

(C) நெடிலடி (D) குறளடி.

37. ‘பளபள’ என்பது ............................ .

(A) அடுக்குத் தொடர் (B) வேற்றுமைத் தொடர்

(C) அன்மொழித் தொடர் (D) இரட்டைக்கிளவி.

38. காடும் காடு சார்ந்த இடமும் .................................... .

(A) முல்லை (B) குறிஞ்சி

(C) பாலை (D) நெய்தல்.

www.careerindia.com

CAREERINDIA



39. சொல்லோ தொடரோ இரு பொருள்படுமாறு பாடுவதும் பேசுவதும் .............................. .

(A) கூறியது கூறல் (B) பிறிதுமொழிதல்

(C) முரண் (D) இரட்டுறமொழிதல்.

40. விண்ணைச் சிரிக்கச் செய்வாள்

கண்ணைப் பறிக்கச் செய்வாள்

- இதில் அமைந்துள்ள தொடை ........................................ .

(A) எளிமை (B) பொழிப்பு

(C) எதுகை (D) அந்தாதி.

41. "இந்த வடை மிகவும் சுவையாக இருக்கிறதே!" இது ........................................ .

(A) வினாத் தொடர் (B) வியப்புத் தொடர்

(C) இயல்புத் தொடர் (D) தொகைத் தொடர்.

42. 'காஞ்சிபுரம் வாங்கினான்' இது ........................................ .

(A) இடவாகுபெயர் (B) தொழிலாகு பெயர்

(C) காலவாகு பெயர் (D) சினையாகு பெயர்.

43. பகைநாட்டின் பசுக்களைக் கவர்தல் ........................................ .

(A) வாகை (B) நொச்சி

(C) கரந்தை (D) வெட்சி.

44. 'வெப்சைட்' - என்பதன் தமிழாக்கம் ........................................ .

(A) இணையம் (B) காட்சித் திரை

(C) வலைத்தளம் (D) விசைப் பலகை.

www.careerindia.com

CAREERINDIA



VIII. தொடர்புபடுத்தி எழுதுக: 4 × 1 = 4

45. செய்யுளைச் சொல்லால் அழகு செய்வது - சொல்லணி

செய்யுளைப் பொருளால் அழகு செய்வது - ........................................ .

46. ஒற்றெழுத்துகள் நீண்டு ஒ ப்பது - ஒற்றளபெடை

உயிர் எழுத்துகள் நீண்டு ஒ ப்பது - ........................... .

47. பொங்கல் உண்டான் - தொழிலாகு பெயர்

ஊர் சிரித்தது - ........................................ .

48. விடுவிக்கப்பட வேண்டிய கதை - விடுகதை

பாமர மக்களின் பழமைமொழி - ................................... .

**பகுதி இ**

IX. 49. நீ வாழும் பகுதியில் வீதிகளில் குவிந்து கிடக்கும் குப்பைகள் குறித்து தகுந்த தலைப்புடன் 'தினத்தந்தி' நாளிதழுக்கான செய்திக் குறிப்பு எழுதுக. 1 × 5 = 5

*அல்லது*

உன் பள்ளியில் நடைபெறவிருக்கும் ஆண்டு விழாவைக் காண வருமாறு தங்கவய ல் இருக்கும் உன் நண்பனுக்கு / தோழிக்கு மடல் ஒன்று வரைக.

X. 50. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை வரைக: 1 × 5 = 5

அ. மழை நீரைச் சேகரிப்போம்

ஆ. கைபேசியின் பல்வகைப் பயன்பாடு

இ. போக்குவரத்து நெரிசல் - காரணமும் தீர்வும்.

www.careerindia.com

www.careerindia.com